[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2019 ஜூலை 11

திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. 2018-2019 ஆம் நிதியாண்டில் ஆவின் பால் பொருட்கள் விற்பனை மையம் அமைக்க, 100 மாற்றுத் திறனாளிகளுக்கு, அவர்கள் செலுத்த வேண்டிய முன்பணத் தொகை 25,000 ரூபாயை தமிழ்நாடு அரசே செலுத்திடும் வகையில் அரசாணை வெளியிடப்பட்டு, திட்டம் செயல்படுத்தப்பட்டது.

இத்திட்டம் மாற்றுத் திறனாளிகளிடம் அதிக வரவேற்பு பெற்றதால், ஆவின் நிறுவனத்திற்கு பயனாளிகள் செலுத்த வேண்டிய முன்பணத் தொகை 25,000 ரூபாயுடன், ஆவின் பொருட்களை கொள்முதல் செய்வதற்கு பயனாளிகளுக்கு மானியமாக 25,000 ரூபாய் என மொத்தம் ஒரு பயனாளிக்கு 50,000 ரூபாய் வீதம் 200 பயனாளிகள் பயனடையும் வகையில், நடப்பாண்டில் ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதைக் கூறி, அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

4. விதி 110-ன்கீழ் அறிக்கை அளித்தல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆஸ்டின், என்ன point of order? (குறுக்கீடு) இருங்கள், என்ன point of order? (குறுக்கீடு)

திரு. எஸ். ஆஸ்டின்: மாண்புமிகு முதல்வர் அவர்கள் (குறுக்கீடு) விதி 110-ன்கீழ் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொருளைப் பற்றி ** (குறுக்கீடு)

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை (குறுக்கீடு) இருங்கள் (குறுக்கீடு) திரு. ஆஸ்டின், இருங்கள். (குறுக்கீடு) ஒரு பொருள் அல்ல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு விதி 110-ன்கீழ் அறிக்கை அளிப்பதற்கு உரிமை இருக்கிறது. அந்த அடிப்படையில் அவர் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்கள் குறித்து . . . (குறுக்கீடு) இல்லை, இல்லை. (குறுக்கீடு) விதி 110-ன்கீழ் நீங்கள் நன்றி சொல்வதாக இருந்தால் சொல்லலாம், விவாதம் கூடாது. திரு. ஆஸ்டின், நீங்கள் பேசியது அனைத்தும் அவைக்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஆஸ்டின் அவர்கள் கேள்வி கேட்டார். அதற்கு இல்லை, முதலமைச்சர் படித்தார் என்று சொல்வதற்கு உங்களுக்கு உரிமை உண்டு. அதில் ஒன்றும் பிரச்சினை இல்லை. அவர் கருத்து கேட்பதற்கு உரிமை. . .* (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, அவர் விவாதம் செய்தார்.* (குறுக்கீடு) *இல்லை, எதிர்க்கட்சித் துணைத் தலைவர், அவர் 110 விதியின்மீது அளித்த அறிக்கையின்மீது விவாதம் செய்யக் கூடாது என்று விதி இருக்கின்றபோது அவர் அதை ஒரு உரிமையாக எடுத்து எழுந்து விவாதமாகப் பேசிய காரணத்தினால் அது அவைக்குறிப்பில் இருப்பது முறையல்ல; 110 விதியின்படி உறுப்பினர் பேசியது முறையல்ல என்கின்ற காரணத்தினால் அதனை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியிருக்கின்றேன். வேறு ஒன்றும் இல்லை.* (குறுக்கீடு) *விதி 110-ன்கீழ் பேசுவதற்கு மாண்புமிகு முதலமைச்சருக்கு உரிமை இருக்கிறது.* (குறுக்கீடு)

திரு. துரைமுருகன்: *தங்களுடைய கருத்தை நான் அப்படியே நூற்றுக்கு நூறு ஏற்றுக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு விதி 110-ன்கீழ் பேசுவதற்கு உரிமை உண்டு. அது குறித்துக் கேட்பதற்கு யாருக்கும் உரிமை இல்லை. அதன்மீது கருத்தைச் சொல்லக் கூடாது என்று சொல்லக் கூடாது. ஏனென்றால் அதன்மீது கருத்தினை எல்லோரும் பாராட்டிச் சொல்கின்றார்கள்.* (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, இல்லை, பாராட்டுவது வேறு.* (குறுக்கீடு)

திரு. துரைமுருகன்: *அதனால் அதன்மீது எந்தக் கருத்தையும் சொல்லக் கூடாது என்கின்றீர்களா?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, இல்லை.* (குறுக்கீடு) *அதோடு விட்டுவிடுங்கள்.*

திரு. துரைமுருகன்: *அதைக்கூட விட்டுவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அப்படியென்றால் அதோடு விட்டுவிடுங்கள்.* (குறுக்கீடு)

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு கேள்வி. விதி 110-ன்கீழ் ஒரு பொருளைப்பற்றி மட்டும்தான் படிக்கலாம் என்று இருக்கின்றபோது ** எதற்காக அதை நீக்குகின்றீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அப்படியென்றால் அதோடு விட்டுவிடுங்கள்.* (குறுக்கீடு) *இல்லை.* (குறுக்கீடு)

THIRU DURAIMURUGAN: It is a relevant point of order. He raised a relevant point of order. (Interruption) It is not an unparliamentary word. (Interruption)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதில்* unparliamentary word *ஒன்றும் இல்லை. அவர்* raise *செய்வதற்கு நான் அனுமதி கொடுக்காமல் இருந்திருந்தால், நீங்கள் பேசுவது முறை. நான் பேசுவதற்கு அனுமதி அளித்தேன்.* (குறுக்கீடு) *அவர் விதி 110-ன்கீழ் அளித்த அறிக்கையின்கீழ்* point of order raise *செய்கிறாரா என்பது எனக்குத் தெரியாது. ஆகவே, ஆரம்பத்தில் விதி 110-ன்கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பின்மீது விவாதம் செய்ய வேண்டும் என்று அவர் கேட்டிருந்தால் அனுமதி மறுத்திருப்பேன். ஆனால் அவர் விதி 110-ன்கீழ் வைக்கப்பட்ட அறிக்கைகள் குறித்து பேசிய காரணத்தினால், விதி 110-ன்மீது அளிக்கப்பட்ட அறிக்கைகள்மீது விவாதம் இருக்கக் கூடாது என்று விதி இருக்கின்ற காரணத்தினால், அதனை வேண்டாம் என்று நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்கி இருக்கின்றேன். மேற்கொண்டு அதில் ஒன்றும் இல்லை. இதில் விவாதம் செய்வதற்கும் ஒன்றும் இல்லை.* (குறுக்கீடு)

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதனைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகக் கேட்கின்றேன். (குறுக்கீடு)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2019 ஜூலை 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, ஒரு முறை இருக்கிறது. அந்த முறையை நாம் இந்த அவையில் ஏற்கெனவே கடைபிடித்துக்கொண்டிருக்கின்றோம். விதி 110-ன்கீழ் அறிக்கைகள் அளிக்கப்பட்டதற்குப் பின்னால் நன்றி சொல்லலாம் என்று நான் அனுமதி அளித்து, நன்றி சொல்லிக்கொண்டிருக்கின்றோம். ஏற்கெனவே இதுகுறித்து எல்லாம் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசியிருக்கிறார்.* (குறுக்கீடு) *இல்லை, இல்லை. விதி 110-ல் அறிக்கை அளிக்கப்பட்ட பல சமயங்களில் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இந்த மன்றத்தில் பேசியிருக்கின்றீர்கள்.* (குறுக்கீடு) *இல்லை, அதனையெல்லாம் நாம் பேசியிருக்கின்றோம். அப்போது பேசியதற்கு பின்னால் இறுதியாக இந்த அவையில் நானே ஒரு* ruling *கொடுத்திருக்கின்றேன். விதி 110-ஐப் பொறுத்தவரையில் நன்றி சொல்லலாம், விவாதம் இருக்க வேண்டாம்* (குறுக்கீடு) *இல்லை, விவாதம் இருக்க வேண்டாம் என்று ஏற்கெனவே நான் ஒரு* ruling *கொடுத்திருக்கின்ற காரணத்தினால் அந்த* ruling-*ஐ நான் இன்று அறிவுறுத்தியுள்ளேன். வேறு ஒன்றும் இல்லை.* (குறுக்கீடு)

திரு. துரைமுருகன்: *இந்த விஷயத்தில், உங்களுடைய* ruling-*ஐயோ, தாங்கள் இப்போது சொன்னதையோ நான் மறுக்கவில்லை. ஆனால், நான் தங்களிடத்தில் தெரிந்துகொள்ள வேண்டியது என்னவென்று கேட்டால், விதி 110, என்ன சொல்கிறது என்பதை ஒரு* point of order *மூலமாக தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறார். அதை ஏற்றுக்கொள்வதற்கோ அல்லது* point of order *இல்லை என்று சொல்வதற்கோ உங்களுக்கு உரிமை உண்டு. அது* point of order *இல்லை, அதை ஒத்துக்கொள்ளமாட்டேன் என்கின்றீர்கள். ஆனால் அதை* expunge *செய்வது என்பது. . .* (குறுக்கீடு)

முற்பகல் 11-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை.* (குறுக்கீடு) *எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, என்னுடைய* ruling *மீது நீங்கள் விவாதம் செய்யக் கூடாது என்பது தெரியும் அல்லவா? ஆகவே, ஏற்கெனவே நான் கொடுத்த* ruling, *விதி 110-ல் அளிக்கப்பட்ட அறிக்கை குறித்து விவாதம் வேண்டாம்.* Point of order *இல்லை. நன்றி சொல்வதாக இருந்தால் சொல்லலாம் என்று தெளிவாக நான்* ruling *கொடுத்திருக்கிற காரணத்தினாலேதான், இன்றைக்கு*

திரு. ஆஸ்டின் சொன்னதை நான் நீக்கி, அவைக் குறிப்பிலே வேண்டாம் என்று சொல்லியிருக்கிறேனேயொழிய, என்னுடைய ruling அடிப்படையில் மேற்கொண்டு அவர் விவாதிக்க வேண்டாம் என்றுதான் நான் நீக்கியிருக்கிறேன். வேறொன்றும் இல்லை. இது பெரிய விவாதம் இல்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் உட்காரலாம். (குறுக்கீடு) இல்லை, என்னுடைய ruling மேலே அவர் பேசிய காரணத்தினாலே நீக்கினேன். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ruling மீது நான் பேச மாட்டேன். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதிமுறையை சுட்டிக்காட்டித்தான் ஒரு வினாவை எழுப்பியிருக்கிறார். அதற்கு நீங்கள் விளக்கம் சொல்லிவிட்டீர்கள். அதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோமோ, ஏற்றுக்கொள்ளவில்லையோ, அது வேறு. ஆனால், உங்கள் ஆணைக்கு நாங்கள் கட்டுப்படுகிறோம். அதை expunge செய்யவேண்டிய அவசியம் இல்லை என்பதுதான் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவருடைய கருத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவரும் சொல்வதை நான் மறுக்கவில்லை. ஆனால் என்னுடைய ruling மேல் விவாதிக்கக் கூடாது என்ற விதியை (குறுக்கீடு) அதாவது என்னுடைய ruling மேல் விவாதிப்பது, அவர் விதி 110-ன்கீழ் அளித்த அறிக்கைகள் குறித்து பேசப் போகிறார் என்பது எனக்கு தெரியாது. அதனால்தான் அவரை நான் பேசுவதற்கு allow பண்ணினேன். தெளிவாக நான் ruling கொடுத்ததற்குப் பின்னால், அதை வற்புறுத்திப் பேசுவது சரியில்லை என்கிற காரணத்தினாலேதான் நீக்கியிருக்கிறேன். வேறொன்றுமில்லை. திரு. ஆஸ்டின், உட்காருங்கள். போதும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திரும்பவும் ஒரு ruling தருகிறேன். 110 விதியின்கீழ் மாண்புமிகு முதலமைச்சரோ, மாண்புமிகு அமைச்சர்களோ ஓர் அறிக்கையை அளித்தால், இந்த அவையிலே இருக்கிற மரபைக் கடைப்பிடித்து, அதுகுறித்து நன்றி தெரிவிக்கலாமேயொழிய,

விவாதிக்கக் கூடாது. மேற்கொண்டு பேச வேண்டாம் என்பதை நான் இந்த அவைக்கு என்னுடைய முறையான அறிவிப்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன். உட்காருங்கள் (குறுக்கீடு). *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வேண்டுகோள். இருக்கின்ற விதிமுறைகளுக்கு மாறாக அவை திசைமாறிப் போகிறபோது, அதை சுட்டிக்காட்டுவதற்கு ஓர் உறுப்பினருக்கு உரிமையுண்டு. சில நேரங்களில் மாண்புமிகு சபாநாயகரின் கவனத்தையும் மீறி, அவை திசைமாறியிருக்கலாம். அப்படி மாறுகிறபோதுதான், பொது முக்கியத்துவம் வாய்ந்த* ** *பற்றி ஓர் அமைச்சர் அறிக்கை அளிக்கிறபோது, "மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* ** *என்று இருக்கிற காரணத்தினால், மாண்புமிகு முதல்வர் அவர்கள்* ** *குறித்து படித்தாரே, இது விதிக்கு மாறானதா இல்லையா" என்றுதான் கேட்டார்கள். ஏனென்றால் திசைமாறுகிறபோது* he is entitled to raise a Point of Order regarding certain Rules. Hon'ble Speaker should allow his Point of order. My humble submission to the Hon'ble Speaker is that you should not expunge his whole speech. Otherwise… *அவருடைய உரிமை என்னவாகும்?* Right *என்னவாகும்? சபையில் எங்களுடைய உரிமை என்னவாகிறது?* (குறுக்கீடு) Sir, *ஒன்றை கவனியுங்கள்,* (குறுக்கீடு) No. I am sorry, Mr. Speaker Sir, *எங்களுடைய உறுப்பினர் விதிமுறைக்கு மாறாக இந்த* Point of Order *கேட்டிருந்தால், நீங்கள் எந்தத் தண்டனை கொடுத்தாலும் நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், தண்டனையெல்லாம் ஒன்றுமில்லை.* (குறுக்கீடு)

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியென்றால் சபையை எப்படி நடத்துவது? தங்களுக்கு வானளாவிய அதிகாரம் இருக்கிறது என்று நீங்கள் சொல்லலாம். உங்களுடைய அதிகாரத்தில் நான் குறுக்கிடவில்லை. ஆனால் எனக்கு இருக்கிற உரிமை, இந்த அவை திசைமாறுகிறபோது அதைச் சுட்டிக்காட்டுகிற உரிமை ஓர் உறுப்பினருக்கு உண்டு என்பதுதான் எங்களுடைய கோரிக்கை.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

முற்பகல் 11-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், உங்களுடைய உரிமையை நான் மறுக்கவில்லை, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இருக்கின்ற உரிமைகளை நான் மறுக்கவில்லை. அதேநேரத்திலே பேரவைத் தலைவர் கொடுத்திருக்கிற* ruling-*ஐ நீங்கள் திரும்பத் திரும்ப வற்புறுத்துவது விவாதமாக இருக்கக் கூடாது என்கிற காரணத்தினாலேதான், அதை நான் வேண்டாம் என்று நீக்கியிருக்கிறேனேயொழிய, வேறொன்றும் இல்லை.* (குறுக்கீடு) *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்கிற நோக்கம் எனக்கும் புரிகிறது. ஆனால் நான் கொடுத்த* ruling-*ஐ மேற்கொண்டு வற்புறுத்த முடியாது என்கிற காரணத்தினாலே, அதை நான் நீக்கியிருக்கிறேனேயொழிய, வேறொன்றும் இல்லை.* (குறுக்கீடு) *வாய்ப்பு இல்லை. இந்த சப்ஜெக்டில் மேலும் விவாதம் வேண்டாம். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களே, போதும். ஏற்கெனவே, இந்த சப்ஜெக்டில் நிறைய விவாதித்து விட்டோம்.* (குறுக்கீடு) *சற்று பொறுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்,* (குறுக்கீடு) *வாய்ப்பு இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்கள் பேசியதை நான் நீக்கியதற்குப் பின்னாலே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் பேசியவற்றை நான்* record *செய்துகொண்டேன்.* Argument-*ஐ நான் மறுக்கவில்லை. நீங்கள் பேசியதை நான்* expunge *செய்யவில்லை.* (குறுக்கீடு) *உங்களுடைய* argument-*ஐ முழுமையாக நான் ஏற்றுக்கொண்டேன். ஆனால், திரு. ஆஸ்டின் அவர்கள் பேசியது என்னுடைய* ruling-*க்கு எதிராக இருந்த காரணத்தினாலே அதனை நான் நீக்கியிருக்கிறேன். வேறொன்றும் இல்லை. அதோடு, இந்த விவாதத்தை விட்டுவிடுங்கள்.*

5. நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*